


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சமூகநலத்துறை மற்றும் இந்திய செஞ்சிலுவை சங்கம் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தினவிழா நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (08.03.2017) நடைபெற்றது.

செ.வெ.எண்:176/2017 நாள்:08.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சர்வதேச மகளிர் தினவிழா நிகழ்ச்சி இன்று (08.03.2017) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சமூகநலத்துறை மற்றும் இந்திய செஞ்சிலுவை சங்கம் இணைந்து சர்வதேச மகளிர் தினவிழா நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (08.03.2017) நடைபெற்றது. இதில் 200-க்கும் மேற்பட்ட மகளிர் கலந்துக் கொண்டனர்.

சர்வதேச மகளிர் தினவிழா நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8-ஆம் தேதி மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது. நமது அலுவலகத்தில் ஆண்களை விட பெண்கள் தான் அதிகமாக பணியில் இருக்கிறார்கள். பெண்களுக்கு எதிராக ஏற்படும் கொடுமைகளை அகற்றுவதற்காகவும், அவற்றுள் இருந்து அவர்களை பாதுகாப்பிற்காகவும் பல்வேறு சட்டங்கள் உள்ளது.

மேலும், மகளிர்கள் அனைவரும் தன்னம்பிக்கையுடனும், தைரியத்துடனும் பணிபுரியும் இடங்களிலும், குடும்பங்களிலும் திறன்பட செயல்பட வேண்டும். மகளிர்கள் தங்களது உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும், பெண்களுக்கு எதேனும் பிரச்சனைகள் இருந்தால் அதனை உயர் அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், சார்பு நீதிபதி, நாகர்கோவில் அவர்கள் பெண்களுக்குரிய உரிமைகள், சட்டங்கள் பற்றி பேசினார்கள்.

இக்கூட்டத்தில், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு.ராஜ்குமார், திட்ட அலுவலர் திருமதி. இரா.இராஜ ஜெயபாலா (மகளிர் திட்டம்), இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.வசந்தி, மாவட்ட சமூக நல அலுவலர் (பொ) திருமதி.பேச்சியம்மாள், இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் செயலாளர் திருமதி.பிரேம லதா, ஒருங்கிணைப்பாளர் திரு.ஆறுமுக நயினார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.